உ
சிவமயம்

gistered as a News paperin Ceylon
P. M. G. NO. H. A 59/300 of 1939.

இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், முசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ரூஅ] யாழ்ப்பாணம்—வியஞு ஐப்பசிமீ உ௩உ (1946 நவம்பர் 8 வெள்ளிக்கிழமை) [இல ௬௦

ஜெர்மனி - அதனுடைய எதிர்காலம்

எழுதியவர்: ஸ்ரீஜுத் தாரகநாத் தாஸ்
தொகுத்தவர்: ஸ்ரீதரன்

(முற்றொடர்)

அமெரிக்க யோசனை

ஜெர்மனியின் எதிர்காலம் என்ன என்னும் விஷயத்தில் இன்று உலகத்தில் வல்லரசுகள் என விளங்கும் நான்குக்கும் பெரும் தலைவலியாயிருக்கிறது ஜெர்மனி விஷயமாக அவை கொண்டுள்ள நோக்கமும் லட்சியமும் பரஸ்பரம் முரண்பாடுடையனவாயிருக்கின்றன. இற்றைக்குச் சின்னாட்களுக்குமுன் பரிஸில் நிகழ்ந்த சமாதான மகாநாட்டில் அமெரிக்க அந்நியநாட்டு மந்திரியான மிஸ்ரர் பிரன்ஸ் ஓர் யோசனை கூறினார்: அதாவது, ஜெர்மனி விஷயமாக நான்கு வல்லரசுகளும் ஓர்வித அபிப்பிராயமுடையராகி, உடன்படிக்கையொன்று செய்யவேண்டும்; அந்த உடன்படிக்கை 25 வருஷ காலத்துக்கு அமுலில் இருத்தல்வேண்டும். இந்தக் காலவெல்லைக்குள், நாலு வல்லரசுகளும் தங்களுக்கிடையே தெரிந்தெடுத்துள்ள ஓர் சபை மூலமாக ஜெர்மனியை மேற்பார்வை செய்து, அந்நாடு இனியும் யுத்தத்துக்குக் கிளம்பாத வண்ணம் அதனைநிராயுதபாணியாக்க வேண்டும்: இதுதான் அமெரிக்க அயல்நாட்டுமந்திரி கூறியுள்ள ஆலோசனை.

ஜெர்மனியின் துணை

இந்த ஆலோசனையை ரூஷியாமுற்றாக வெறுத்தொதுக்கியது. இங்கிலாந்தெனிலோ, வழவழா நியாயங்கள் பேசியது. ஆனால் அதற்கு இந்த ஆலோசனைக்கு இணங்கஇஷ்டமில்லை. ஜெர்மனியை நிராயுதபாணியாக்குதல் ரூஷியாவுக்கோ, இங்கிலாந்துக்கோ விருப்பமில்லை; அவை தனித்தனி தங்களுடைய எதிர்கால நிலையைப்பற்றியே சிந்தித்து, அப்படியான காலத்திலே எப்படித் தத்தம் துணைக்குச் ஜெர்மனியைச் சேர்த்துக் என்பதை இப்போதே யோசித்துக் கொள்ளுகின்றன. சமீப காலத்திலில்லாவிட்டாலும், ஓர் காலத்திலே ஐரோப்பிய நாடுகளுக்குள் முன்போலப் பரஸ்பரம் விரோதம் ஏற்பட்டுவிட்டால், ஜெர்மனியின் துணை வேண்டிவருமே என்று ரூஷியாவும், இங்கிலாந்தும் இப்போதேதிட்டம்போட்டு வருகின்றன என்று கூறினால் அது மிகையாகாது

எக்கட்சி?

உலகத்தின் எதிர்கால அரசியற் பிரச்சினைகளில் ஜெர்மனியை ஒதுக்கிவிடமுடியாது. அந்நாடு இன்று தட்டுக்கெட்டுத் தடுமாறிக் கேவல நிலையில் இருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் இதே நிலைமையில் தான் முதலாவது ஐரோப்பிய மகாயுத்தம் நடந்தபின்னும் இருந்தது. இப்போது ஐக்கியதேச ஸ்தாபனம் என ஒன்று இருக்கிறதுதான். ஆனால் அந்த ஸ்தாபனத்தால், எதிர்கால யுத்தங்களைத் தடுக்க முடியுமா? அந்த ஸ்தாபனம் இருந்தும், உலக நாடுகள் இன்றுமும்முரமாக ஆயுத உற்பத்தியிலும், யுத்த ஆயத்தங்களிலும் ஈடுபடுகின்றனவே, அவை இப்போதே இரு கட்சிகளாகச் சேர்ந்துவிட்டன. ஒருகட்சி ருஷியாவுடனும், மற்றக் கட்சி ஆங்கில அமெரிக்கக் கோஷ்டியுடனும் நிற்கின்றன. இப்படியான ஓர் நிலையிலே 6½ கோடி மக்களாகிய ஜெர்மனியர் எப்படிச் சும்மாவிருக்க முடியும்? மேலே சொல்லிய இரு கட்சிகளும், ஜெர்மனியை நோக்கி "என் பக்கம் வா" என்று தனித்தனி கேட்கும் காலம் ஒன்று வரவிருக்கிறது அக்காலத்தையே, இன்று ஜெர்மனி எதிர்நோக்கியிருக்கிறது. அந்தக்காலத்திலே, ஜெர்மனி சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளும். எந்தக் கட்சி இப்போது தனக்குநேர்ந்துள்ள இன்னல்களை அகற்ற முன்வருமோ, எந்தக்கட்சி ஜெர்மன்வர்த்தகத்துக்கு ஆதரவு கொடுக்குமோ. அந்தக் கட்சியுடனேயே ஜெர்மனி நிச்சயமாகச் சேரும் என எதிர்பார்க்கலாகும்.

ரூஷியாவுக்கு விரோதமாகவா?

இப்போது நான்கு கூறுகளாகப் பங்கு போடப்பட்டிருக்கும் ஜெர்மனியை ஒன்றாக்குவது ரூஷியாவுக்கு விருப்பமில்லை. ஏன்? எல்லாக் கூறுகளும் ஒன்றாகத் திரண்டால் ஜெர்மனி முன்போல மத்திய ஐரோப்பாவிலே வலிமை பெறக்கூடும் என ரூஷியா அஞ்சுகிறது. ரூஷியா இன்று தனது ஆதிபத்தியத்தைப் பால்க்கன் நாடுகளிலும் டன்யூப் நதிப் பிரதேசங்களிலும் விஸ்தரித்துக் கொண்டு போகிறது. இப்படியே இன்னும் விஸ்தரித்துக்கொண்டு போகுமானால், தங்களுக்குக் கட்டாயம் ஆபத்து நேரும் என்பதை ஆங்கில அமெரிக்கக் கட்சி நன்றாக உணருகிறது. ரூஷியாவின் அதிகாரத்தை, செல்வாக்கை நிறுத்தவேண்டுமாயின் ஓர்பலமுள்ள ஜெர்மனி ஆங்கில அமெரிக்கக் கட்சிக்கு உதவிசெய்து பக்கபலமாயிருக்கவேண்டும் என்பதை அமெரிக்க—பிரிட்டிஷ் இராஜதந்திரிகள் உணருகிறார்கள். எனவே, இன்னும் சில ஆண்டுகளில், ஆங்கில—அமெரிக்க மேற்பார்வையில் ஜெர்மனி முன்போலத்தன் நிலைமையை அடையவும்கூடும். இதனை ரூஷியா அறியாமலில்லை. ஜெர்மனியிலும் அதன்மூலமாக ஐரோப்பாவிலும் ஆங்கில - அமெரிக்க செல்வாக்குப் பரவக்கூடாது என்பது ரூஷியாவின் அபிலாஷை! அப்படிப் பரவவிடாது தடுப்பதற்கு ருஷியா ஒரேயொரு மார்க்கத்தைக் கைக்கொள்ளவேண்டும். அங்கு சமதர்மக் கொள்கைகளை விதைக்கவேண்டும். அதன் பயனாக, ஜெர்மனியிலே சமதர்மவாதிகள் கிளம்பவேண்டும். உள்நாட்டுக் கலகங்கள் கிளம்பவேண்டும். இன்று சீனாவிலே என்னவிதமான நிலைமை ஏற்பட்டிருக்கிறதோ, அதேவிதமான ஓர் நிலையை ஜெர்மனியிலும் சிருட்டித்தால், ஜெர்மனி தலைதூக்கமுடியாது. இதுதான் ரூஷியா செய்யப் போகிறது. எது எப்படியிருந்தபோதிலும், எதிர்கால உலக அரசியலிலே ஜெர்மனியின் பங்கு அதிகமாகும்.

பொலிசார் எங்கே?

நெருக்கடிகாலத்தில் மறைவா?

(நமது நிருபர்)

சென்ற செவ்வாய்க்கிழமை பின்னேரம் 3½ மணிவரையிருக்கும்: வண்ணார்பண்ணை கதிரேசன் கோவிற் சந்திக்கணித்தாக ஓர் கலவரம் மூண்டது. அந்த வீதியில் கடை வைத்திருந்த ஒருவருடைய கடையில் அடிபிடி தாராளமாக நடந்தது. தெருநீளம் ஏராளமான ஜனங்கள் குழுமி நின்றனர். சனச் சஞ்சாரமும் வண்டிகள் நடமாட்டமும் செய்தல் மிகவும் கஷ்டமாகவிருந்தது.

இதிற் குற்ப்பிடத்தக்க விசேஷம் என்னவென்றால், வழக்கமாக அச்சந்தியில் நின்று வழிகாட்டும் பொலிஸ்காவலனும் அந்தநெருக்கடியான சந்தர்ப்பத்தில் இல்லாமையே. சாதாரண காலத்திலேயே குறித்த சந்தி மிகவும் ஆபத்தானது. அப்படியென்றால் ஜனங்கள் கும்பலாக நின்றுள்ள இத்தகைய சந்தர்ப்பத்தில் அபாயத்தைப்பற்றிக் கூறவும் வேண்டுமா? பொலிஸ் நின்று வழக்கம்போல வழிகாட்டாதபடியினால், பஸ்களும், கார்களும், வண்டிகளும் பட்ட இடைஞ்சல் கொஞ்சமல்ல.

வழக்கமாக நின்ற குறித்த பொலிஸ் அந்தச் சந்தர்ப்பத்தில் எங்கே சென்றார்? நெருக்கடியான கலவரமான இடங்களிலிருந்து எங்கள் இலங்கைப் பொலிஸ் புலிகள் இல்லாமல், எல்லாம் முடிந்தபின்தான்தோற்றுவது வழக்கம் என்ற ஓர் அபவாதம் இந்நாட்டில் அவர்கள்மீது இருந்துவருகிறது. இது விரும்பத்தக்கதல்ல என்பதுமாத்திரம் தெரிவிக்க விரும்புகிறேன்.

புதிய அரசியல்

ஜூலை மாதத்தில் நிகழுமா?

இலங்கையின் அடுத்த பாராளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல்கள் வருகிற ஜூன்மாதம் நிகழும் என்றும், பாராளுமன்றத்துப் பிரதிநிதிகள் சபையின் முதற் கூட்டம் ஜூலைமாதம் முதலாம் திகதி கூடலாம் என்றும் கொழும்பு 'ரைம்ஸ்' பத்திரிகை கூறுகிறது.

இப்போதுள்ள அரசாங்கசபை வருகிற மார்ச்மாதம் கலைக்கப்படும்.

புதிய பாராளுமன்றத்துத் திறப்பு விழாவுக்குச் சமுகமாயிருக்கும்படி மன்னர் தம்பதிகளுக்கு இலங்கை மந்திரசபையினர் ஓர் அழைப்பு விடுத்தனர். ஆனால் அவர்கள் வரமுடியாது என்று இப்போது நிச்சயமாகத்தெரிகிறது. ஆனால் இராஜகுடும்பத்தில் உள்ள ஒருவர் சமுகம் அளிக்கலாம்.

1947—ம் 48-ம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தைப் புதிய பாராளுமன்றமே வகுக்கவேண்டுமாயின், அது ஜூலைமாதத்திற் கூடவேண்டியது அத்தியாவசியகம் என்று ஓர் உயர்தர அதிகாரி கூறுகிறார்.

இதுதான் சமாதானம்?

90 லட்சம் படைகள் ஆயத்தம்

சென்றவாரம் நிகழ்ந்த பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக் கூட்டத்திலே மிஸ்ரர் சேர்ச்சில், ரூஷியா ஐரோப்பாவில் தான் ஆக்கிரமித்துள்ள நாடுகளிலே 200 பட்டாளங்களை வைத்திருக்கிறது என்றும், இது ரூஷியரின் அடுத்த யுத்த ஆயத்தத்துக்கு அறிகுறி என்றும் கூறினார். இக்கூற்றைப் பிரிட்டிஷ் அரசாங்கம் மறுக்கவில்லை. ஆனால் ஸ்ராலின் அப்படித் தன்னுடைய அரசாங்கம் 200 படைகளை வைத்திருக்கவில்லை 60 படைகளைத்தான் வைத்திருக்கிறது என்று கூறினார். ஒருபடையில் எத்தனை பேர் உளர்? ஓர் படையில் 50000 பேர் வரையில் இருக்கலாம் என்பது சேர்ச்சிலின் யூகம். அப்படியானால் ஸ்ராலின் சொல்லுகிறபடிக்கும் (50000 × 60) 30 லட்சம்படைகள் ரூஷியாவை ஒழிந்த ஏனைய ஐரோப்பியநாடுகளில் ரூஷியா வைத்திருக்கிறது.

இப்படி ரூஷியா மாத்திரம்தான் படைகளைக் குவித்து வைத்திருக்கின்றதா? அமெரிக்காவும் இங்கிலாந்தும், குறைந்தபட்சம் 20 லட்சம் படைகளை யுத்த சன்னத்தமாக வைத்திருக்கின்றன. இந்த ஆண்டு முடிய பிரிட்டிஷ் படைகளை 11 லட்சத்துக்குக் கொண்டுவருவது என பிரிட்டிஷ் அரசாங்கம் முந்தித் தீர்மானித்தது.

ஆனால் அப்படிக் குறைப்பதற்கு இப்போது சாத்தியமில்லை என்று பிரிட்டிஷ் பிரதமமந்திரி பாராளுமன்றத்திற் கூறியிருக்கிறார்.

அமெரிக்காவின் ஓர் பிரபல பத்திரிகை, இப்போது வல்லரசுகள் யுத்த சந்நத்தமாக வைத்திருக்கும் படைகள் தொகை பின்வருமாறு எனக் குறிப்பிடுகிறது:

ரூஷியா	30	லட்சம் படைகள்
சீனம்	27	,,
இங்கிலாந்து	15	லட்சம்
அமெரிக்கா	10	,,
யூகோசிலாவியா	8	,,
	90	லட்சம்

மேலே குறித்த 5 வல்லரசுகளும் மாத்திரம் தமக்கிடையே 90 லட்சம் படைகளை வைத்திருக்கின்றன. இப்படியாக ஒன்றுக்கொன்று போட்டியாகப் படைகளை வைத்திருப்பதன் காரணம் என்ன? பரஸ்பர சந்தேகமும் அச்சமும்தான் காரணம். இப்படியான நிலைமையில் உலகிலே சமாதானம் எப்படி நிலவும்?

பொருளாதார விஷயமாகச் சொல்லுமிடத்தும், இன்று உலகம் இத்தகைய கேவல நிலைமையில் இருப்பதற்கு இந்த 90 லட்சம் படைகளுமே காரணம் என்று கூறினும் பொருந்தும். ஆகவே, உலக மக்கள் உஜ்ஜீவித்துச் சுகம் பெறவேண்டுமானால், ஒவ்வொரு நாடும் தனது உள்நாட்டுப் பாதுகாப்புக்குப் போதிய படை மாத்திரம் வைத்துக்கொண்டு மீதியைக் கலைக்கவேண்டும் என்று ரூஷியா யோசனை கூறுகிறது. ஆனால் இந்த யோசனையை ஏற்பவர் யார்?

Digitized by Noolaham Foundation
Sri Lanka Digital Library, Sri Lanka

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துபர் தீர்கவே.

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஹ
ஐப்பசிமீ உங்உ வெள்ளிக்கிழமை

ஏதுவருமோ அறிகிலேம்

எங்கள் அயல்நாடாகிய இந்தியாவிலிருந்து இப்பொழுதுவரும் சமாசாரங்களெனிலோ பயங்கரமானவை; இலகுவில் மறக்கமுடியாதவை; இந்தியதேசத்தில் இந்துக்களுக்கும் இஸ்லாமியருக்கும், இஸ்லாமிய தலைவரென்று சொல்லப்படும் மிஸ்ரர் ஜின்னா காரணமாக மூண்ட பிணக்கும் பகையும் வளர்ந்து மூற்றி, இந்திய இடைக்காலச் சுயராச்சியம் தொடங்கியபின் பெரும் அநர்த்தம் விளைக்கலாயிற்று; முஸ்லிம் லீக் தலைவரென் றிருக்கும் மிஸ்ரர் ஜின்னாவோடு, இந்திய தலைவர்களாகிய மகாத்மாகாந்தி பண்டிதர் நேரு மூதலான அரசியல் ஞானிகளும் இந்திய பிரதிகாவலராகிய லார்ட் வேவலும் பலமுறை சமாதானம் பேசியும் மிஸ்ரர் ஜின்னா ஒருவழிக்கு வந்திலரென்பது உலகப்பிரசித்தம்; இடைக்காலச் சுயராச்சிய பரிபாலனமுறை ஆரம்பித்தபோது, மிஸ்ரர் ஜின்னா தம் பக்கலிலுள்ள மக்களுக்குப் போதித்த "நேரடிச் செயலாற்றல்" என்ற போதனையே இந்தியாவிற் பல இடங்களிலும், மூன்னெக்காலத்திலும் எந்த நாட்டிலும் நடவாத கொலை, பெண்களைக் கற்பழித்தல், குடியிருக்கும் வீடுகளுக்கு நெருப்பு வைத்தல் முதலாம் பயங்கரமான அநர்த்தங்களை இலட்சக்கணக்கிற் செய்யும்படி இஸ்லாமியரிற் பெரும்பாலாரைத் தூண்டிவிட்டதென அறியக் கிடக்கின்றது; வங்காளத்தின் கிழக்குப் பகுதியில் நடந்த கலகத்தில் நேர்ந்த அக்கிரமங்களையும் கொடுஞ்செயல்களையுஞ் சொல்ல எவருங்கூசுவர்; சொன்னலும் கேட்டஎவருங் நடுங்குவர்; இப்படியெல்லாம் மிஸ்ரர் ஜின்னாவின் கூட்டத்தவர்கள் செய்தாலும், இந்திய மகாநாட்டு (காங்கிரஸ்) கட்சியார், இந்த அக்கிரமங்களையும் கிஷ்டூரங்களையும் பொருட்சேதம் உயிர்ச்சேதங்களையும் மானபங்கத்தையும் சகித்துக்கொண்டிருந்தனர்; ஆனலும் இவ்வநர்த்தங்களை வங்காள அரசினரும், மத்திய அரசாங்கமும் விரைவில் அடக்கி யறவே யொழிக்காமையினற் போலும், கூடியதொகையினராகிய இந்துக்களும் குறைந்த தொகையினராகிய இஸ்லாமியரும் வசிக்கும் பீகார் மாகாணத்திலே, பழிக்குப் பழி வாங்கும் முறையில் இந்துக்கள் கலகஞ் செய்யத் தலைப்பட்டு அந்த மாகாணத்தில் வசிக்கும் இஸ்லாம் குடியினர்க்குப் பலவகையான அநர்த்தங்களையும் விளைக்கலாயினர்.

ஆனல் இப்பொழுது, மகாத்மா காந்தியும் பண்டிதர் நேருவும் ஏனைய இந்திய மகாநாட்டுத் தலைவர்களும், பீகார் மாகாணத்திலே தொகையிற் கூடியவர்களாகிய இந்துக்கள், தொகையிற் குறைந்தவர்களாகிய இஸ்லாமிய மக்களுக்கு எக்காரணம் பற்றியாக எவ்வகையான இம்ஸையுஞ் செய்யவொண்ணுதென்ற வைராக்கியம் பூண்டு நிற்கிறார்கள். இப்படியான பழிக்குப்பழி வாங்குஞ் செயலைச் செய்யத் துணிந்தமை வெகு அக்கிரமமென்றும், பீகார் மாகாணத்தில் நடக்கும் கலகமும் கொலையும் பொருட்சேதமும் ஏனைய அக்கிரமங்களும் 24 மணி நேரத்தில் தவிர்க்கப்படா விட்டால் தாம் சாகும் வரை உண்ணாவிரதம் பூணுவேமெனவும் மகாத்மா காந்தி திடமாகத் தெரிவித்துள்ளார்; பண்டிதர் நேரு கலகம் அடங்கா விட்டால் ஆகாயவிமான மூலமாகக் கலகக்காரர்மீது வெடிகுண்டிடச் செய்து கலகத்தை அடக்கவேண்டி நேரிடுமெனத் தெரிவிக்கின்றார். மேலும் பீகார் மாணத்திலுள்ள இஸ்லாமியரைக் கொல்வதெனக் கலகக்காரர் மூயன்றால், அக்கலகக் காரர் தம்மை (நேருவை) முதற் கொன்றுவிட்டுத் தம்முடைய பிரேதத்தின்மீதே நடந்து செல்லவேண்டி நேருமென்கிறார்கள்; மகாத்மா, நேரு போன்ற பெரியார்கூறும் உறுதி வாக்கியங்களும் சபதங்களும் வீண் பேச்சுக்களல்ல; இவர்கள் தாஞ் சொன்னவற்றைத் செய்தே தீர்பவர்கள்; எதனையும் தீர்க்கமாக ஆலோசித்து நிச்சயித்தபின்பே வெளியிடு மியல்புடையவர்கள். இந்த இரகசியத்தை இந்திய மகாநாட்டினரும் அவர்களைச் சேர்ந்த மக்களனைவரும் அறிவர்; பீகார் மாகாணக் கலகம் விரைவில் நின்று விடுதலுங் கூடும்.

ஆனல் மகாத்மாவும் பண்டிதர் நேருவும் சொல்லிய சபதங்களும் அவர்களுடைய அகிம்ஸா தருமமும் அந்த ஜின்னாவுக்கும் அவருடைய கூட்டத்தினருக்கும் ஏதும் பயன் செய்யுமோ என்ற ஆசங்கை பிறக்கின்றது; மகாத்மாகாந்தியும் நேருவும் இப்படியான சபதங்களைச் செய்திருந்தால், அச் சபதங்கள் நிறைவேறுதொழிய அவர்கள் மாண்டொழிவதை விரும்புவோரல்லவா அந்தஜின்னாவும் அவர்கள் கட்சியாரும்! பாரத யுத்த விஷயமாகப் பஞ்சபாண்டவரும் பாஞ்சாலியும் செய்த சபதங்கள் பிரதிகூலமாக, அவர்கள் மாண்டொழிய வேண்டுமென்று துரியோதனன் செய்த முயற்சி சற்றல்லவே; ஆனலும் ஈற்றிலே தருமம்வெற்றியுற, துரியோதனனதியோர் மாள, அதருமமும் அறவே யொழிந்த தல்லவா! இப்பொழுது இந்தவிஷயம் எப்படி முடியுமோ, இதனல் ஏது வருமோ அறிகிலேம்!

இந்திய அறிஞர் பிரிவு

பிரபல இந்திய அரசியல் நிபுணரும் நியாயவாதியுமான சேர் பி. எஸ். சிவஸ்வாமிஐயர் சென்ற செவ்வாய்க்கிழமை தேகவியோகமாயினர் என்று அறிகிறோம்.

உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்—123)

"ஊரை உலைமூடி கொண்டு மூடிவிட முடியுமா?"

அன்று வித்தியாசாலைக்குச் சென்ற இங்கிதம் இயன்றவரையில் தலைமையாசிரியர் கண்ணிற் புலப்படாமல் தன் கடமையைப் பார்த்து வந்தாள்; தலைமையாசிரியரும் கூடியவரையில் இங்கிதம் கடமை பார்க்கும் வகுப்புக்களுக்குப் போகாதுவிட முயன்றார்; ஆனல் அவள் சங்கீதம் பயிற்றும்போது, அவள் பாட்டைக் கேட்கவொட்டாது தன் செவிகளைத் தடுத்தற்கும், அப்பாட்டைக் கேட்டு உருகவொட்டாது தன்னுள்ளத்தைத் தடுக்கவும் அவரால் முடியவில்லை; இந்தச் சம்பந்தவிஷயம் இரண்டு மூன்று தினங்களுக்கு இரகசியமாக இருந்தனினும், பின்னர் மெல்ல மெல்ல வெளிவரலாயிற்று. அவ்வித்தியாசாலையி லுள்ள உபாத்தியாயர்களும் மேல்வகுப்பிலுள்ள பிள்ளைகளும் ஒருவாறு அறியலாயினர். தன்னுடன் படிப்பிக்கும் பெண் உபாத்தியாயர்கள் சிலர் தன்னைக் கண்ட மாத்திரத்தே புன்னகை செய்தலையும், தன்னைப் பார்த்து அவர்கள் தங்களுள் இரகசியம் பேசுதலையும், அப்படியே சிறுமியர் செய்வதையும் வித்தியாசாலையிலே கடமை பார்க்கும்போது இங்கிதம் அவதானித்தாள்; அவர்கள் வேறு விஷயமாகப் புன்னகை செய்தாலும் இரகசியமாகப் பேசினலும் இங்கிதம் தன் விஷயமாகத்தான் புன்னகை புரிகிறார்கள், இரகசியம் பேசுகிறார்கள் என்றெண்ணி இலச்சைப் படுவாள்; இது எப்படிப் பரகசியமானதென்று சிந்தனை செய்வாள்: பொய்யான செய்திகளும் பிறக்கும் இந்த உலகத்திலே உள்ளது வெளிவருதல் ஒரு நூதனமா? ஊரை உலை மூடிகொண்டு மூடிவிட முடியுமா என்று இங்கிதம் தன்னளவிற் சொல்லித் தானுகவே தேறிக்கொள்வாள்; ஆனல் இங்கிதத்தின் விவாக நிச்சய விஷயமாகக் கேள்விப்பட்டோர் எவரும் சந்தோஷமுற்றார்களேயொழிய, பொறுமைகொண்டாரெவருமில்லையெனலாம்.

துரோவி ஆக்கவேணும் கூழை உசாவிச்செய்யவேணும் கலியாணத்தை

இவை இங்ஙனமாக, தலைமையாசிரியராகிய சூரிய நாராயண சாஸ்திரியார் தாம் ஒழுங்கு செய்துள்ள தம் விவாக விஷயமாகத் தம் பெற்றோருக்கும் உற்ற உறவினர் சிலருக்கும் எழுதிய கடிதங்களைப் படித்து, அக்கடிதத்திலே பெண்ணின் பெருங்குணங்கள் தகைமைகளை யறிந்து வெகுவாகச் சந்தோஷப்பட்டார்கள்; தலைமை யாசிரியருடைய பெற்றோர் இச்செய்தியை யறியாத தம் சுற்றமித்திரர் சிலருக்கும் விஷயத்தைச் சொல்ல, அவர்கள் கேட்டு அது செய்யத்தக்க தென்றனர்; சூரிய நாராயண சாஸ்திரியாரின் தந்தையார் தம்முடைய சிறிய தகப்பனராகிய, வேங்கடாசல சாஸ்திரியார் வீட்டிற்குப் போய் அவருக்கும் தம் மகன் செய்த ஒழுங்குகளைப் பற்றிச் சொல்ல, அவர் "எட தம்பி நம்ம பேரன் எழுதியிருப்ப தெல்லாம் சரிதான்; அது நல்ல சம்பந்தந்தான்; ஆனலும் தூரவி ஆக்கவேணும் கூழை, உசாவிச் செய்யவேணுங் கலியாணத்தை என்று உலகத்திலே சொல்லுவார்கள்; எந்த விஷயத்தையும் முந்தியே ஆராய்ந்து செய்வது நல்லது; ஆய்ந்தோய்ந்து பாராதவன் சருமம் தான்சாந்துயரந் தருமென்பது பழமொழி; யோசியாமல் ஒரு கருமத்திலே இறங்கிவிட்டுப் பின்னர்ச் சங்கடப்படுவது புத்தியல்ல; ஆதலால் உங்களு ளெவரேனும் முந்தியே அங்கேபோய், பெண்ணின் கோத்திரஞ் சூத்திரம் குடி என்னு மிவைகளையும் குணம் நடை இலட்சணம் என்னு மிவைகளையும் நேரில் அறிந்தும் பார்த்தும் ஆகவேண்டியதைச் செய்வதுதானே முறையாகும், தம்பி; ஒருபோது இந்தக் கலியாணத்தைக் குழப்புதற்கு இப்படிச் சொல்லுகிறேனென் றெண்ணுதே. எங்கள் குடும்பத்துள் இன்னனத்தவருள் உன் பிள்ளைக்காகிய பெண்ணில்லை யென்பது உனக்குத் தானே தெரியும்; ஆனதால் எதனையும் ஆராய்ந்து செய்வது நல்லது" என்று சொல்லிமுடித்தார்; தலைமையாசிரியரின் தகப்பனரும் "சிற்றப்பா, நீங்கள் சொல்வது முழுவதும் நிசம்; அறியாமலா, சம்பந்தம் பேசும் விஷயத்திலே காலங்கண்டமுதியோர் தலையிடவேண்டு மென்று உலகத்திலே சொல்வது; ஆனல் எனக்கு மகனிருக்கும் இடத்திற்குப் போக இப்போதைக்கு நேரமில்லை; வேறு இங்கிருந்து அங்கே போக்குதற்கான வாய்த்த ஆளுமில்லை; ஆனதால், சிற்றப்பா, உங்களுக்கு ஆகவேண்டிய பயண வசதிகளெல்லாஞ் செய்து வைக்கிறேன்; நீங்கள் தயவுசெய்து எனக்காக, மகனிருக்கு மிடத்திற்கு ஒருமுறை போய் எல்லாவற்றையும் நல்லாய் ஆராய்ந்து வருவீர்களானுற் பெரிய நன்மையாகும்" என்று பணிவுடன் கேட்டார்; கிழவனர் சற்றுநேரம் யோசித்துவிட்டு, "என்ன தம்பி, எனக்கும் வயது எழுபத்தாறுகப் போகிறது; இத்தத் தள்ளாத காலத்திலே என்னைப் போய்வரச் சொல்லிக் கேட்கிறாய், ஆனலும் நல்ல கருமத்திற்கு மறுப்புச் சொல்லவொண்ணுது; சரி, நீ பயணத்திற்கு ஆகவேண்டிய ஆயத்தங்களைச் செய், நான் ஒரு நல்லநாள் பார்த்துப் புறப்பட்டுப்போய், எல்லாம் விசாரித்துக் கொண்டு வருகிறேன்" என உடன்படுதலும், "அப்படியே செய்யுங்கள்" என்று சிறியதந்தையாருக்குச் சொல்லிவிட்டு, தலைமையாசிரியரின் தகப்பனர் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு தம் வீட்டிற்கு மீண்டார்.

"நீ சொல்வதும் நியாயந்தான்"

வேங்கடாசல சாஸ்திரியார் ஒரு நல்ல நாளில், தம் வீட்டிலிருந்து புறப்பட்டுப் புகைரத ஸ்தானத்தை யடைந்து புகைரத மேறிக்கொண்டு, சூரிய நாராயண சாஸ்திரியார் இருக்குமிடத்தை யடைந்தார்; குறித்த சாஸ்திரியார் புறப்பட்டு வருகிறாரென்ற செய்தியை முந்தியே தமது தகப்பனர் எழுதிய கடிதமூலம் அறிந்திருந்த தலைமையாசிரியர், உடனே புகைரத ஸ்தானத்திற்குச் சென்று கிழவனரை எதிரேற்று அழைத்துக்கொண்டு வந்து தம் விடுதியில் உபசரித்து இருக்கச் செய்தார்; கிழவனர் தொன்மை பாராட்டி, தமக்குப் பேரன் முறை யுண்ட தலைமையாசிரியருக்குத் தாம் அப்போது அங்கே வந்த நோக்கத்தையும் ஏனைய வரலாறுகளையும் எடுத்துச் சொல்லி, அப்படியான சம்பந்தம் தமக்கும் சம்மதந்தான் என்றும் கூறினர்; கிழவனர் அந்தப் பெண்ணை நேரிற் காணவிரும்புகிறார் என்பதைக் குறிப்பாலுணர்ந்த தலைமையாசிரியர் "பாட்டா உங்களைச் சிரமப்படுத்துகிறேனென்று குறையெண்ணுதீர்கள்; ஒருநாளைக்குப் பெண்வீட்டிற்கு நீங்கள் போய்ப் பெண்ணைப்பார்த்து வந்தால் நல்லதென நினைக்கிறேன்" என்னுர், "போரா, அந்தப் பெண் உன்னுடைய பள்ளிக்கூடத்திற் படிப்பிக்கும் கன்னிகையாமே, அப்படியானல் நான் போய்ப் பார்ப்பதென்ன? வேணுமானல் இங்கே பள்ளிக்கூடத்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இந்திய அரசியல்

பழிக்குப்பழி!

வங்காளத்திலே முஸ்லீம் காடையர் செய்யும் அக்கிரமங்களுக்குப் பழிவாங்குவதற்கு பீகார் ஹிந்துக் காடையர் துணிந்து விட்டார்கள். பாடலிபுரப் பகுதியிலும், ஏனைய சில பகுதிகளிலும் முஸ்லீம்கள் தாக்கப் பட்டும் கொல்லப்பட்டும் வருகின்றனர் என்றும் செய்திகள் கூறுகின்றன. ஹிந்துக்கள் சிறுபான்மையினராகவுள்ள பிரதேசங்களிலே, முஸ்லீம் காடையர் அக்கிரமங்கள் செய்தால், அதே அக்கிரமங்களை முஸ்லீம்கள் சிறுபான்மையாகவுள்ளவிடங்களில் ஹிந்துக் காடையரும் செய்வதற்குப் பின் வாங்கமாட்டார்கள் என்பதை ஜின்னாசாகிப்பும், நெருப்பு மொழிகள் கக்கிய அவருடைய கையாட்களும் இப்போது உணர்ந்து விட்டனர் என்று கூறினும் பொருந்தும்.

* *

உண்ணாவிரதமா?

பாடலிபுரத்தில் நிகழும் வகுப்புக் கலவரங்கள மகாத்மாகாந்தியடிகளை மிகவும் வருத்தியிருக்கின்றன, 24 மணி நேரத்துக்குள் வகுப்புக் கலவரங்கள் ஒழியாவிட்டால் தாம் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக மகாத்மாகாந்தியடிகள் சென்ற திங்கட்கிழமை பீகார் வாசிகளுக்கு அறிவித்திருக்கிறார் பழிக்குப்பழி வாங்குவது, ஹிந்து தர்மத்துக்கே முழு எரோதமானது. அது வெட்கக்கேடான செயல். ஆகவே இந்த வெட்கக்கேடான அக்கிரமத்தை யொழிப்பது தம் கடமையென்றும் அதற்காகத் தமது ஆவியையே அர்ப்பணம் செய்வதுதான் ஒரே மார்க்கம் என்றும் காந்தியடிகள் தெரிவித்திருககிறார்.

* *

நேருவின் ஆத்திரம்

பீகாரில் வகுப்புக் கலவரத்தைத் தூண்டியுள்ளவர்கள் தங்கள் அக்கிரமங்களை உடனே ஒழிக்கவேண்டும். அப்படி ஒழிக்காவிட்டால் ஆகாச விமான மூலமாகக் குண்டுமாரி பொழிந்து கலகக்காரர்களின் கொட்டத்தை அடக்கத் தயங்கமாட்டேன் என்று பண்டிதர் ஜவஹர்லால் நேரு ஓர் எச்சரிக்கைவிடுத்திருக்கிறார். பண்டிதர் நேரு இடைக்கால அரசாங்க அங்கத்தவருள் ஒருவரான அப்துல்ரூப் நிஷிட்டர்என்பவருடன் சென்ற திங்கட்கிழமை பீகாருக்குச் சென்று நிலைமையை அவதானித்தார்.

* *

இது பேடித்தனம்

ஆகாச விமானமூலம் குண்டுமாரி பொழிய முயற்சிப்பது பேடித்தனம். ஆண்மகனுக்கு அழகல்ல என்று மகாத்மாகாந்தி பண்டிதர் நேருவின் அறிக்கையைக் கண்டித்துக் கூறுகிறார் அவர் மேலும் கூறுவதாவது. "ஆயுதம் கொண்டு மக்களை அடக்குவது பிரிட்டிஷாருடையமுறை; இந்த முறையைத்தான் இந்திய மக்களின் ஜனநாயக ஸ்தாபனமான காங்கிரஸ் கைக்கொள்ளப்போகிறதா? அப்படிப் பழிக்குப்பழி வாங்குவதுபயங்கொள்ளித்தனமாகும்; இப்படியான தீய செயல்களைச் செய்வதிலும் பார்க்க, எங்களுக்குச் சுயராச்சியமே வெண்டாம் என்று இருப்பது மேல்."

* *

மகாத்மாவின் செய்தி

பீஹார் மக்களுக்கு மஹாத்மா காந்தி ஓர் செய்தி விடுத்திருக்கிறார் அதில் அவர் குறிப்பிடுவதாவது: "நீங்கள் என் வேண்டுகோளுக்கு இணங்கி, இந்த அக்கிரமச் செயல்களை ஒழிக்காது விட்டால், நான் உண்ணாவிரதம் இருப்பது நிச்சயம் அப்போது எனக்கு உதவி செய்தற்கு எவரும் அவசரப்பட்டு ஓடிவரவேண்டியது இல்லை



உண்ணாவிரதம் இருப்பாரா?

என்மீது கொண்டுள்ள அநுதாபத்தின் காரணமாக வேறுயாரும் உண்ணாவிரதம் இருக்கத்தானும்வேண்டியதில்லை. ஆண்டவன் சந்நிதியில் நானும் மற்றவர்களைப் போலத்தான். இந்தப் பூதவுடம்பு மூலமாக இன்னும் சிலகாலத்துக்குச் சேவை செய்ய வேண்டும் என்பது ஈஸ்வர சங்கல்பமாயின் இத்தேகத்துக்கு ஆபத்து ஒன்றும் நிகழமாட்டாது. பீகாரில் நடக்கும் அக்கிரமம், பாரத சமுதாயத்துக்கே இழுக்காகும், மகத்தான ஹிந்து சமூகத்தை உலகமக்கள் நோக்கி எள்ளிநகையாட ஏதுவாகும். பீகாரில் சிறுபான்மையினராக வசிக்கும் முஸ்லிம்களைச் சகோதரத்துவபான்மையுடன் நடத்தி, அவர்களுக்குப் பாதுகாப்பளிப்பது, பெரும்பான்மையினராகவுள்ள பீஹார் ஹிந்துக்களது பெரும் கடமையாகும்"

* *

அருட்டன்மை

மகாத்மாகாந்தி யடிகளின் மேலேகாட்டிய மணிமொழிகளையும், அவர் ஆற்றவிருக்கும் மகத்தான தியாகத்தையும், பிதற்றுரை மொழிந்து இந்தக் கலவரங்களுக்கெல்லாம் மூலகாரணராக விருந்த ஜின்னாக் கோஷ்டியினர் இனியாவது அவதானித்து நடப்பரா? இந்தக் கேள்வி இப்போது பிறந்துள்ளது. பீகார்க் கலவரம் தொடககியபின்னர்த்தான், மகமத் அலி ஜின்னா கண்விழித்து, வகுப்புக் கலவரங்களைக் கண்டித்தார். அதற்குமுன்னர் ஆகஸ்டுமாதம் 16ந் திகதி தொடக்கம் இரண்டுமாதகாலமாக முஸ்லிம் காடையர் செய்யும் அக்கிரமங்களைக் கண்டும் காணாதார்போல இருந்தார். பீகார்ஹிந்துக்கள் பழிக்குப் பழிவாங்க நினைத்துக் கருமம் ஆற்றியபோதுதான் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையைப்பற்றி ஜின்னாவும் அவர் கூட்டாளிகளும் உணரத் தொடங்கினர்.

* *

"என்னை முதலிற் கொல்லுங்கள்"

பீகாரிற் பலவிடங்களில் பண்டிதர்நேரு ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை விஷயமாகச் சொற்பொழிவுகள் செய்தார். தாரஜியன் என்னும் இடத்திலேதான் முஸ்லிம்கள் படுமோசமாகக் கொலைசெய்யப்பட்டனர். அங்கே நேரு போய் ஓர் பிரசாரணம் செய்தார். உங்களுக்கு முஸல்மான்கள் மீது கோபமிருந்தால், முதலில் என்னைக் கொல்லுங்கள்; நான் இறந்துவீழ, என்னுடைய பிரேதத்தின்மேலாய் நடந்து, முஸ்லிம் சகோதரர்களைக் கொல்லுங்கள் என்று உருக்மாகக் கூறினார். அவருடைய பிரசாரணம் அங்குச் சமூகமாயிருந்தவர்களின் மனத்தை யுருக்கி அவர்களைச் கண்ணீர் வடிக்கும்படி செய்தது பிரசாரணத்தின் முடிவில், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்து "ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை வாழ்க! சமூக வேற்றுமை வீழ்க" என்று கோஷமிட்டனர்.

100 அணுக் குண்டுகள்

அமெரிக்காவிடம் இப்போது 9000 தொன் நிறைகொண்ட 100 அணுக்குண்டுகள்வரை உண்டு என்று சாப்மன் பின்சர் என்பவர் டெயிலி எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் கூறுகிறார்.

ஜப்பானிய வர்த்தகம்

மீண்டும் தலைகாட்டுமா?

ஜப்பானிலே, அமெரிக்க சேனாதிபதியான மக் ஆர்தரின் ஆஞ்ஞைப்படி, இப்போது ஜனநாயக ஆட்சி நிலவுகிறது. இதன் பயனாக ஜப்பான் இன்னும் சில காலத்தில், கைத்தொழில் விஷயமாக முன்போல முன்னேற்றமடைந்துவிடுமோஎன்ற தலைவலி இப்போதே பிரிட்டிஷ் முதலாளி வர்க்கத்தவர்க்குப் பிடித்துவிட்டது.

ஜப்பானிய கைத்தொழில்கள் புநருத்தாரணஞ் செய்யப்பட்டால், அவற்றிலிருந்து ஆக்கப்படும் பொருள்கள் புறநாடுகளுக்கு ஏற்றுமதியாகி, அங்கே பிரிட்டிஷ் பொருள்களுடன் போட்டியிடாமல் இருக்கத்தக்க நடவடிக்கைகளை இப்போதே கைக்கொள்ளவேண்டும் என்று பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் "கன்ஸர் வேற்றிவ்" கட்சியைச் சேர்ந்தவர்கள் ஓர் பிரேரணையைப் பாராளுமன்றத்திற் கொண்டுவரப் போகிறார்கள் என்று தெரிகிறது.

1942-ம் ஆண்டு ஜப்பான் யுத்தத்தில் இறங்கமுன், உலகத்திலே ஜப்பானியப் பொருள்களே அநேகமாக உபயோகிக்கப் பட்டன வென்பதும், அவற்றுக்கு விரோதமாகப் பிரிட்டிஷ் அரசாங்கம் எத்தகைய பாதுகாப்பு வரிகளை விதித்தும் பயன் கிடைக்கவில்லை என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாம். அப்படியான ஓர் நிலை மீண்டும் ஏற்படுமாயின் பிரிட்டிஷ முதலாளி வர்க்கம், இப்போது உலகம் இருக்கும் நிலைமையில் அப்படியே அல்லோல கல்லோல நிலைமையை அடையவேண்டியதுதான்.

கேஸ்காருக்குப் பதவி?

அகில இந்திய காங்கிரஸ் சபைக் காரியதரிசி டாக்டர் பாலகிருஷ்ண கேஸ்காருக்கும் அன்னியநாட்டில் தூதர்பதவி கிடைக்கலாமென்று யூக மிருபபதாக "பிரீ பிரஸ்" செய்தி ஒன்று கூறுகிறது. சீனாவுக்கு இந்திய வைத்தியத் தூதுக் கோஷ்டித் தலைவராகச் சென்ற டாக்டர் அட்டாலுக்கும் அதேபோல ஒருபதவி கிடைக்கக்கூடுமாம். இவ்விருவருக்கும் மேற்கண்ட உத்தியோகங்கள் கிடைக்கலாமென்று காங்கிரஸ் வட்டாரங்களில் பேசிக்கொள்ளப் படுகிறதாம். டாக்டர் கேஸ்கார் பிரான்ஸ் தேசத்தில் ஆறுவருஷங்கள் தங்கி கலையில் தேர்ச்சிபெற்று டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறார். அவருக்கு பிரெஞ்சு பாஷை நன்றாகத் தெரியும், அவர் பிரெஞ்சு பாஷையில் அழகாகப் பேசும் வன்மையுடையவர் என்று பிரெஞ்சுக்காரர்களே ஒப்புக்கொள்ளுகின்றனர்.

எல்லாரும் வாருங்கள் இஸ்லாமிற் சேருங்கள்

என்கிறார் முஸ்லிம் லீக் மந்திரி!

முஸ்லிம் லீக்கின் உதவியுடன், இடைக்கால அரசாங்கத்திலே கேந்திரநாத் மண்டல் என்னும் தாழ்த்தப்பட்டவர் இந்திய இடைக்கால அரசாங்கத்தில் மந்திரியாக இருக்கிறாரல்லவா? இந்த மண்டலுக்குச் சென்ற வாரம் புது டெல்கியில் அவருடைய கூட்டாளிகளால் ஓர் உபசாரக் கூட்டம் வைத்துக் கௌரவிக்கப்பட்ட கஸ்துனாபர் அலிகான் என்னும் இடைக்கால அரசாங்கத்து மந்திரியும் அதிற் சேர்ந்துகொண்டார்.

மத்திய அரசாங்கத்தில், லீக்கின் உதவியினால் தனக்கும் இடம் கிடைத்ததைக் கண்ட இந்தமண்டல் தாழ்த்தப்பட்டவர்கள் விஷயமாக முஸ்லிம் லீக்கும் அதன் தலைவர் ஜின்னாசாகிப்பும், கொண்டுள்ள ஔதாரிய சிந்தையை வானளாவப் புகழ்ந்தார். லீக் தலைவரான ஜின்னா ஓர் அகில இந்திய மகாநுபவர் என்றும், அவர்முஸ்லீம்களுக்கு மாத்திரமன்றி, சகல சிறுபான்மையினர்க்குமே சேவைசெய்ய அவதாரம் எடுத்த புண்ணியாத்மாவாக்கும் என்றும் மண்டல்புழுகிறார். அவர் அவ்வளவுடன் நிற்கவில்லை. ஜாதி ஹிந்துக்கள் தீண்டாதாரை இப்போது செய்வதுபோல ஒதுக்கு வாரேயானால் அத்தீண்டாதார் இஸ்லாம் மதத்திற் சேர்ந்து முஸ்லீம்களாகிப் பாகிஸ்தானத்திற் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பவற்றை அநுபவித்துக் சுகமாக வாழுவர் என்றும் கரைந்தார்.

இவருக்குப்பின் பேசிய கஸ்னாபர் அலிகான் தமது மூடையை அவிழ்த்தார். இந்தியாவில் உளள 40 கோடி மக்களும் இஸ்லாம் மதத்திற் சேர்ந்தால்தான் இந்தியாவுக்குக்கதிமோட்சம் உண்டென்றும், அப்படி மதம் மாறி வருபவரை ஏற்பதற்கு இஸ்லாம் ஆயத்தமாகவிருக்கிறது என்றும், ஆனால் இப்படி மதம் மாற்றும் விஷயத்தில் பலாத்காரத்தைஇஸ்லாம் உபயோகிக்காதென்றும் கூறினார்.

2000ரூபா பெறுமதியான அரிசி

சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்ப்பாணம் நாவாந்துறைக் கடலில் இருதோணிகளில் 2000 ரூபா பெறுமதியான அரிசி இருந்ததை துப்பறியும் பகுதியைச் சேர்ந்த உபபரிசோதகர் றொட்றிக்கோ கைப்பற்றினார்.

குறித்த இந்த அரிசி வள்ளம்மூலம், மன்னாரிலிருந்து கொண்டுவரப்பட்டது என்று கூறப்பட்டது. இவ் விஷயமாகச் சூசைப்பிள்ளை என்பவர் சிறையாக்கப்பட்டு, சென்ற திங்கட்கிழமை யாழ்ப்பாணம் நீதிஸ்தலத்தில் குற்றம் சாட்டப்பட்டார்.

எதிரி, தான் நிரபராதி என்று வாதிக்க நீதிபதி வருகிற 18ந் திகதிக்குத் தவணையிட்டு, எதிரியைப் பிணையிற் போகும்படி உத்தரவிட்டார்.

சீனி நிலைமை

இப்போது இலங்கையிலே சீனிஇருப்பு நிலைமை மிகவும் திருப்திகரமாயிருக்கிறது என்றும், ஜனவரிமாதம் வரைக்கும் அது போதியதாகும் என்றும் உணவுப்பகுதி அதிகாரி திரு கே ஆழ்வாப்பிள்ளை அறிவிக்கிறார்.

திருக்கோணமலைத் தளம்

கிழக்குப்பகுதியிலே பிரிட்டிஷ் கடற்படைக்கு ஓர் பிரதான தளமாகவுள்ளது திருக்கோணமலை. இதனைக் கிலமடையவிடாது நல்லநிலைமையில் வைக்க முயற்சிகள் செய்யப்படுகின்றனவாஎன்று சென்ற வாரம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் ஓர் கேள்வி கேட்கப்பட்டது, இந்த விஷயத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் மிகவும் முயற்சியாக இருக்கிறது என்றும், குறித்த கடற்படைத் தளத்தைப் பார்வையிட்டு ஏற்றனவற்றைச் செய்ய ஓர் நிபுணரை அங்கே அனுப்பியிருப்பதாகவும் கடற்படைமந்திரி பதிலிறுத்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுருட்டுத்தொழில்

உற்பத்தியாளர் கடமை

(ஸ்ரீதரன்)

இந்த யாழ்ப்பாணத்தின் பிரதான தொழில்களில் ஒன்றாக விருந்து, இந்நாட்டுப் பொருளாதார விருத்திக்கு ஏதுவாக விருந்தது சுருட்டுத் தொழில். இத்தொழிலில் ஓர் காலத்தில் ஈடுபட்டிருந்தோர் தொகை 30000 வரை என்றும் சொல்லப்பட்டது. இத்தொகை இப்போது குறைந்திருக்கவேண்டும். எனினும் ஓர் பெருந்தொகை மக்கள் தம் ஜீவியத்துக்கு இதனையே நம்பியிருக்கின்றனர் என்பது பொருந்தும். இத்தொழிலில் ஈடுபட்டுள்ளோர் இப்போது வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். இவ் வேலைநிறுத்தத்தத்துக்கான காரணம் இப்போதுள்ள விகித்திலும் பார்க்க 1000 சுருட்டுக்கு 50 சதம் மேலதிகமாகக் கேட்பதே. அதாவது 1000 சுருட்டுச் சுருட்டுவதற்கு இப்போதுள்ள வேதனம் 4 ரூபா 60 சதம். இதனை 50 சதம் அதிகரித்து 5 ரூபா 10 சதமாகத் தரவேண்டுமென்று தொழிலாளர்கள் கேட்கிறார்கள். இவர்களுடைய கோரிக்கையைச் சுருட்டு உற்பத்தியாக்குவோர் பூர்த்தி செய்து வைத்தாலும், இன்னுஞ் சில காலத்தில், தொழிலாளர் கிளர்ச்சி செய்து, இந்த வேதனம் போதாது என்று கூறக்கூடிய அறிகுறிகள் இன்று காணப்படுகின்றன.

1000 சுருட்டுக்கு 5–10 வேதனம் கொடுத்தாலும் தொழிலாளி இப்போதுள்ள நிலைமையில் திருப்தியடையடைய முடியாது. ஒரு தொழிலாளி சராசரியாக தினம் ஒன்றுக்கு 500 சுருட்டுக்களே சுருட்ட முடியும். அதற்கு வேதனம 2-55 சதம். ஆனால் இத்தொழிலாளிக்கு மாதத்திலே 26நாட்களுக்கும் தொழில் கிடையாது. சராசரியாகப் பார்க்குமிடத்தில், ஓர் மாதத்தில் 12 நாட்களுக்குத்தான் தொழில் கிடைக்கிறது. ஆகவேஇந்தப் பன்னிரண்டுநாட்களிலும், ஓர் தொழிலாளி ஏறக்குறைய 31 ரூபா வேதனந்தான் பெறமுடியும். இந்த அற்ப தொகையுடன் இந்தக் காலத்திலே ஓர் தொழிலாளி ஜீவனஞ் செய்யமுடியாதென்பது எவருமறிந்த இரகசியம். இப்போதுள்ள நிலைமையை உற்று நோக்குமிடத்து, வாழ்க்கைச் செலவு கூடிய சீக்கிரத்தில் குறைவதாகத் தெரியவில்லை குறைந்தபட்சம் ஓர் மாதத்தில் 26 நாட்களுக்காவது தொழிலாளி வேலை செய்யத்தக்கதாக இத்தொழில் புநருத்தாரணஞ் செய்யப்படவேண்டும். அப்போதுதான் இதற்குக் கதிமோட்சம் உண்டு. இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள உற்பத்தியாளர்கள் இத்தொழில் உலக்கை தேய்ந்து உளிப்பிடியானதை அவதானிக்கவேண்டும். யாழ்ப்பாணஞ் சுருட்டுக்கிருந்த மானம் இப்போது இல்லை. சிகரற், பீடி என்பன மக்களைக் கவர்ந்துவிட்டன. இதில் ஈடுபட்டுள்ளோர் இனியும் காலந்தாழ்க்காமல், ஒன்றுகூடி ஆக வேண்டியவற்றைச் செய்தால்தான் இத்தொழில் தலைதூக்க முடியும் அன்றேல் அழிந்து ஒழிந்துவிட வேண்டியதுதான்.

ஹிட்லர் இருக்கிறாரா?

அமெரிக்க அதிகாரி வெளியிடும் விஷயம்

ஹிட்லர் உயிருடன் இருக்கிறாரா? அல்லது அவர் பெர்லின் நகர யுத்தத்தில் இறந்துவிட்டாரா? இந்த ரசமான கேள்விக்கு இப்பொழுது பதில் சொல்வது கஷ்டம். ஒரு சாரார் அவர் இறந்துவிட்டார் என்று சொல்ல, இன்னொருசாரார் மும்முரமாக அவர் உயிருடன் இருக்கிறார் என வற்புறுத்துகின்றனர். இப்போது ஓர் அமெரிக்க உத்தியோகத்தர் ஹிட்லர் உயிருடன் இருக்கிறார் என்று கூறுகின்றார். இந்த அமெரிரிக்கர் சாதாரண அதிகாரியல்ல. இவர் அமெரிக்காவின் இரகசியத் தூதர் படைத்தலைவர். அனேக காலமாக, அமெரிக்க அரசாங்கத்தின் கட்டளைப்படி ஹிட்லரின் மர்மத்தை ஆராய்ந்தவர். அவர் பின் வருமாறு கூறுகிறார்:— ஓர் உளவு உத்தியோகஸ்தர் என்றஹோதாவில் நான் எவர்மீதும் சந்தேக மனப்பான்மையுடையவன். இதுவரையில் ஹிட்லரின் பிரேதம் கண்டுபிடிக்கப்படவில்லை. இதுகுறித்து அநேக ருஷ்யர்களுடன்கலந்து ஆலோசித்தேன். அவர்களும் ஹிட்லரின் சவத்தைப் பார்த்ததாகக் கூறவில்லை. பெர்லின் சண்டையின் அந்திய தினங்களில் ஹிட்லர் தற்கொலை புரிந்துகொண்டாரெனக் கூறுவதற்கு ஆதாரமாய் உருப்படியான சாட்சிய மெதுவும் கிடையாது. ஹிட்லர் இறந்தார் என்று சொல்லுவதற்குக்கூட ஓர் ஆதாரமும் இல்லை. ஹிட்லர் அவரது துணைவியாகிய கபா பிரான், மார்ட்டின் போர்மன் ஆகிய மூவரும் தப்பித்துப் போயிருக்கலாமென்பது சாத்தியமே. அவர்கள் தப்பித்துச் செல்ல சிரமமோ, நஷ்டமோ இருந்திருக்கமுடியாது. ஏனெனில், பெர்லின் நகரில் அப்போது குண்டுவீச்சினாலும் தீயாலும் எல்லா பொலிஸ் அறிக்கைகளும் எரிந்துபோய் விட்டதினால் அவர்கள் போலி அறிக்கைகளைக் கொண்டு மாறுவேஷத்தில் சென்றிருப்பது சுலபமே.

இவ்விதம் அறிவித்துள்ள இந்த அமெரிக்க உத்தியோகஸ்தர் இப்போது பெர்லின் ராணுவ அரசாங்கத்தில் அரசியல் விவகார உதவி அதிகாரியாக வேலை பார்த்து வருகின்றாராம்.

மறுபடியும் சத்தியாக்கிரஹம்?

நேரு அரசாங்கத்துடன் பிரிட்டிஷ் அரசாங்கம் அனுஷ்டித்துவரும் கொள்கை அநேகருக்குத் தெரிந்திருக்கக் கூடும் பிரிட்டிஷ் அரசினர் இந்திய அரசினர் ஒற்றுமையாகவும் ஒருமனதுடனும் வேலை செய்து வருவதைக் கண்டு ஏமாற்றமடைந்துவிட்டார்கள். முஸ்லிம் லீக் மூலம் அவர்கள் செய்துவரும் குழப்பங்களும் அநேகருக்குத்தெரிந்ததுதான். பிரிட்டிஷார் அனுஷ்டிக்கும் கொள்கை காந்திஜிக்குப் பிடிக்கவில்லையாம். அவர்கள் இன்னும் சரியாக நடந்துகொள்ளாவிட்டால் காந்திஜி தமது சத்தியாக்ரஹப் போரைத் தொடக்கயோசனைசெய்துவருகிறார் என்று அவருடன் நெருங்கிய உறவுகொண்டவர்களில் ஒருவர் தெரிவித்ததாக 'நேஷனல் ஹெரால்டின் அலகபாத் நிருபர் தெரிவிக்கிறார்.

உங்கள் வியாபாரம்
விருத்தியுற
இந்துசாதனத்தில்
விளம்பரஞ் செய்யுங்கள்

கடிதம்

ஆர்த்திரா தரிசன நிர்ணயம்

பத்திராசிரியருக்கு:

வருகிற மார்கழிமாசம் நிகழவிருக்கும் ஆர்த்திரா தரிசனம், மார்கழிமாசம் 22-ம்திகதி உதயத்தில் என்று இரகுநாதையர் பஞ்சாங்கத்திலும் 23-ம் திகதியென்று கும்பகோணம் மடத்துப் பஞ்சாங்கத்திலும் காணக்கிடக்கிறது; (1) மட்டுவில் திருக்கணித பஞ்சாங்கத்திலே மார்கழிமாசம் உ௨-ம் தேதி, திங்கள் உதயம் சிதம்பரம் நடேசர் ஆர்த்திரா தரிசனம், காரைநகர்ச் சிவன்கோயில், நீர்வேலிக் கந்தசுவாமி கோயில் நடராசர் தீர்த்தம் என தேவாற்சவாதிகள் என்ற பகுதியில் மேற்படி பஞ்சாங்கம் 56-ம் பக்கத்திலும், 23-ம் தேதி செவ்வாய்க்கிழமை ஆர்த்திரா தரிசனமென மார்கழிமாசம் என்ற தன் கீழ் பஞ்சாங்கம் 33-ம் பக்கத்திலும் முரண்படக் குறிக்கப்பட்டுள்ளன; இந்தவாறு பஞ்சாங்ககணிதர்கள் பரஸ்பரம் முரண்படத் தலைப்பட்டுக்கொண்டால் விரதம் உற்சவம் முதலியவைகளை மக்கள் நிச்சயித்து அநுட்டித்து வழிபடுவது எவ்வாறோ?

22-ம் திகதி மிருகசீர்ஷமும் சதுர்த்தசியும் உதயத்தின் மேலும் நிற்கின்றன. மிருகசீரிடமும் சதுர்த்தசியும் கூடிய தினத்தில் திருவாதிரைத் தரிசனம் செய்தால் வியாதி பீடிக்கும் ராஷ்ட்ரத்தில் என்று விலக்கி மறுதினத்திற் செய்க என விதிக்கிறது காரணாகமம்: நக்ஷத்திரம் இரு தினத்திற் பங்காக இருந்தால் நிசியிற் சேர்ந்திருப்பதே விசேடம் என்றும், அபிடேகத்தை இரவிற் செய்க என்றும் ஆர்த்திரா நட்சத்திரம் அந்தநேரத்தில் இருக்கவேண்டும் என்றும், இராத்திரியில் 48 நாழிகைக்குமேல் அபிஷேகம். 54 நாழிகையில் நிவேதனம் பூசை என்றும், அதன்பின் 56 நாழிகையில் ஆர்த்திராதரிசனம் உத்தமம் என்றும், அதற்குமேல் இரண்டு நாழிகையிற் செய்வது மத்திமம் என்றும், அதற்குமேற் செய்வது அதமமென்றும், உதயத்துக்குமுன் உத்ஸவம் முடிய வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது உத்தரகாரணாகமம் 30 வது ஆர்த்திரா விரதலட்சண படலம்பார்க்க. நிர்ணயம் எப்படியிருந்த போதிலும், சிதம்பரத்தை இதுசம்பந்தமாகப் பின்பற்றும் பழக்கம் பலரிடத்தில் இருப்பதால், அத்தலத்திலும்இந்தியாவிலுள்ளஏனையவடநாட்டிலுள்ளகோயில்களிலும்நடைபெறுவது எப்போதென்பதை முன்னதாகவே அறிந்து கொள்வது நன்மையாகும்.

மேலும், கார்த்திகை 22-ந் திகதி விட்டுணுவாலய தீபம் என்று இரகுநாதையர் பஞ்சாங்கத்தி லுள்ளது. கும்பகோண மடத்துப் பஞ்சாங்கத்தில் 23-ந் திகதியெனக் குறிக்கப்பட்டிருக்கிறது.

இவைகளை ஆராய்ந்து நிச்சயித்த பின் பத்திரிகையில் வெளியிடுதல் நன்றென நினைக்கிறேன்.

இங்ஙனம்
ச. குமாரசுவாமிக் குருக்கள்
அச்சுவேலி
வியஆ ஐப்பசிமீ

அமெரிக்காவில் தூதர்

இந்திய அரசாங்கத்திலே அங்கத்தவராயிருந்த சேர் ஷாபத் அகமத்கான், முஸ்லிம் லீக் அதிற் சேர்ந்த பின்னர், முன்னேற்பாட்டின்படி விலகிக்கொண்டார். அமெரிக்காவின்முதல்இந்தியஸ்தானிகராகஅவர் நியமிக்கப்படலாம் என்று ஓர் செய்தி கூறுகிறது.

திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

சனி நவம் 9

காலை: 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பி மஹாதேவன் வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 கே ஸி பக்கிரிசாமி பாட்டு 8-30 காலை இசை 9 முடிவு.

1 பி மஹாதேவன் வயலின் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2 05 சர்வகலாசாலைகளுக்கு 2-15 கே ஸி பக்கிரிசாமி பாட்டு 2 45 முடிவு.

மாலை: 5 திருப்பத்தூர் ஆர் ராமநாத பாகவதர் பாட்டு 5-40 பெரியபராண விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 திருப்பத்தூர் ஆர் ராமநாத பாகவதர் பாட்டு 7-15 மாற்றி அமைக்கும் வசதிகள் பேச்சு 7-30தமிழில் செய்திகள் 7-45 மதராசில் உள்ளபடி (டி கே பட்டம்மாள் பாட்டு) 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 எஸ் எஸ் பரமசிவமபிள்ளை பாட்டு 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9.45 இசைவேளை 10-30 முடிவு.

ஞாயிறு நவ 10

காலை 71-5 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 மூவலூர் எஸ் செல்லப்பா பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 நாகஸ்வர இசை 8-30 உமையாள்புரம் ஜி கலியாணராமையர் பாட்டு 9 முடிவு.

12 கதம்பம் 12-30 மங்களம் ஹாஸ்ய இசைநாடகம் 1 மணி மலர் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2-05 மின்னிசை 2-30 நீங்கள் கேட்டவை 3 முடிவு.

மாலை 5 சாவித்திரி கணேசன் பாட்டு 5-40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராமநிகழ்ச்சிகள் 7 மூவலூர் எஸ் செல்லப்பா பாட்டு 7.30 தமிழில்செய்திகள் 7-45 தீண்டாமை பேச்சு 8 உமையாள்புரம் ஜி கல்யாணராமய்யர் பாட்டு 8.30 சாவித்திரி கணேசன் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ரேடியோ நாடக இசை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9-45 டி ஆர் கிருஷ்ணமாச்சாரி வீணை 10.30 முடிவு.

திங்கள் நவ 11

காலை 7-15 கீதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7.30 எஸ ராஜரத்னம் நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 புதிய பாடலகள் 8.30 எஸ் எம் அஹமத் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ் எம் அஹமத் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 எஸ் எம் அஹமத் பாட்டு 2-15 கல்விஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 எஸ் ராஜரத்னம் நாகஸ்வரம் 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 இருகுரலிசை 7-15 இலக்கியவாசகம் 7.30 தமிழில் செய்திகள் 7.45 திருப்பாம்புரம் என் சாமிநாதபிள்ளை புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 திருப்ககழ் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் 9.45 இசைவேளை 10-30 முடிவு.

செவ்வாய் நவ 12

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 கே வி நடராஜன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலை இசை 8.30 குஞ்சுமணி வெங்கடராமன் புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 குஞ்சுமணி வெங்கடராமன் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2.05 குஞ்சுமணி வெங்கடராமன் புல்லாங்குழல் 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45முடிவு.

மாலை 5 டி என் கங்காபாய் பாட்டு 5.40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 டி கே பட்டம்மாள் இசைத்தட்டு 7-15 லயமும், ச்ருதியும் இசை நிகழ்ச்சி 7-30 தமிழில் செய்திகள் 7-45 தனக்கணக்கு பேச்சு 8 கே வி நடராஜன் பாட்டு 8-30 டி என் கங்காபாய் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குறவஞ்சி பாட்டுகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 நீங்கள்கேட்டவை இசைத்தட்டு 10-30 முடிவு.

Digitized by Noolaham Foundation
http://noolaham.org/tamilnavanaham.org

உலகம்பலவிதக் கதை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திற்கு வரும்போது நான் போய்ப் பார்க்கலாமே" என்று பதில் சொன்னார்; "பார்க்கலாந்தான், ஆனாலும், பாட்டா, அவர்களுடைய வீட்டிற்கு நீங்கள் நேரிற் போய்ப் பார்ப்பது அவர்களைக் கௌரவப்படுத்துவதாகும், எனக்கும் பெருமையாகும், உங்களுக்கும் மரியாதையாகுமென்றெண்ணுகிறேன்; நீங்கள் பெண் வீட்டிற்குப் போதற்கு ஆகவேண்டிய ஒழுங்குகளை நான் செய்து வைக்கிறேன்" என்றார் தலைமையாசிரியர்; "நீ சொல்வதும் நியாயந்தான்பேரா; எங்கே எனக்கு வயசு போக வாக்கு மாறிவிட்டது; சரி, எப்பொழுது போக வேண்டும்" என்று கிழவன் சொல்லிக் கேட்க, "நாளை சனிக்கிழமை, பெண்ணும் வீட்டிலே இருக்குஞ் சமயம்; ஆனதால் நாளைக்காலை போசனத்தை முடித்துக்கொண்டு நீங்கள் அங்கே போய்வரலாம்" என்றார் தலைமையாசிரியர்; பாட்டனாரும் அதற்கு உடன்பட்டார். அன்று பின்னேரம் தலைமையாசிரியர் பள்ளிக்கூடத்திலிருக்கும்போதே, ஒரு கடிதத்தை இராமச்சந்திரனுக்குஎழுதி, விலாசமிட்டு அதனை இராமச்சந்திரனிடங் கொண்டுபோய்க் கொடுக்கும்படி தம் கல்லூரிச் சேவகனிடம் கொடுத்தனுப்பினார்; அவன் அப்படியே கடிதத்தைக் கொண்டுபோய்க் கொடுத்தான்;

காடு வா என்கிறது
வீடு போ என்கிறது

இவை இவ்வாறாக, தலைமையாசிரியருக்கும் இங்கிதத்திற்கும் கல்யாணம் ஒழுங்குபண்ணுவதற்காக, தலைமையாசிரியருக்கு மூதாதையாயுள்ள ஒரு பெரியவர், தம்மூரிலிருந்து இங்கே வந்து தலைமையாசிரியருடைய விடுதியிலேதான் தங்கியிருக்கிறாராம் என்ற செய்தி முதல் அக்கல்லூரியாசிரியர் மாணாக்கர்கட்கிடையும் பின்னர்க் கல்லூரியின் அயலட்டத்திலும் பரவியது; அக்கல்லூரியின் அயலிற் குடியிருப்பவளும் அக்கல்லூரியிற் படிப்பவளுமாகிய ஒரு சிறுமி தன்வீட்டிற்கு மீண்டவுடனே தன் பாட்டியைக் கண்டு "பாட்டி பாட்டி, ஒரு புதினம் உங்களுக்குத் தெரியுமோ" என்று வினவ "இல்லையடியம்மா, எனக்குக் கண்ணுந் தெரியாது, காதுங் கேளாது, இந்தத் தளர்ந்த காலத்திலே எந்தப் புதினத்தை ஆரிடங் கேட்டு, நான் பெற்ற மகளின் மகளே, அறிய முடியும்? அல்லாமல் காடு வா என்கிறது வீடு போ என்கிறது; இந்த நிலைமையிலும் புதினம் அறியவேண்டுமோ எடியம்மா; என் புதினந்தானே இந்த நேரத்தில் பெரும் புதினமாயிருக்கிறது; இருந்தாலும் சொல்லடியம்மா கேட்கிறேன்" என்று பரக்கப் பறைந்தாள் அந்தக் கிழவி; "புதினமென்ன தெரிமோ, எங்கள் தலைமை உபாத்தியாயருக்கும், எங்களுக்குச் சங்கீதம் சொல்லித்தரும் உபாத்தியாயரம்மாவுக்கும் கல்யாணம் நடக்கப் போகிறதாம்; கல்யாணமெல்லாம் ஒழுங்குபண்ண எங்கள் தலைமை உபாத்தியாயருடைய பாட்டனாரொருவர் வந்து அவருடைய விடுதியிலேதான் தங்கியிருக்கிறாராம்; அப்படியானால் கல்யாணம் நடக்கும்போது எங்களுக்கும் கல்லூரியிலே இரண்டு மூன்று நாள் விடுமுறை கிடைக்கும், இந்தப் புதினத்தைத்தான் பாட்டிக்குச் சொல்ல வந்தேன்" என்று குதூகலத்தோடு சொன்னாள் அந்தச் சிறுமி; "உந்தப் புதினமா, உது முந்தியே எனக்குத் தெரியுமெடி பேரப் பெண்ணே, கல்யாணம் ஒழுங்கு பண்ணப் பாட்டனார் வந்திருப்பதென்ன? முந்தியே மாப்பிள்ளையும் பெண்ணுஞ் சந்தோஷமாமே! இனியென்ன ஊருக்காகப் பேருக்காக ஓமம் வளர்த்துத் தாலிகட்டுவதா? இதற்காகத்தான் பெண்டுகளைப் படிப்பிக்கப்படாதென்றுநான் நெடுகச்சொல்லுகிறது" என்றுஉழறினாள் கிழவி; கேட்ட சிறுமி திடுக்குற்றுக் கவலைப்பட்டுக் கிழவியைச்சினந்து, "பாட்டி, பாட்டி, உந்தப் பல்லில்லா வாயால் எலும்பில்லா நாவால் இப்படி அபவாதஞ் சொல்லாதீர்கள்; நீங்களும் அந்தக் காலத்திலே படித்திருந்தால் ஒருபோதும் இப்படிச் சொல்லத் துணியமாட்டீர்கள்; உங்களுக்கு வயசுபோயும் மயிர்நரைத்தும் தோல் திரைத்தும் பல்வீழ்ந்தும் உடல் தளர்ந்தும் எவரையும் பொல்லாங்கு சொல்லுங் குணம் மாறவில்லை. எங்கள் பெரிய உபாத்தியாயரையும் சங்கீத உபாத்தியாரம்மாவையம் எல்லாரும் பாராட்டிப் பேச நீங்கள்தான் இப்படி அபவாதஞ் சொல்லுகிறீர்கள்; சற்று முன்பு நீங்கள் கண்தெரியாது காது கேளாது, காடு வா என்கிறது வீடு போவென்கிறது என்றெல்லாஞ் சொன்னீர்களே; சாகப் போகிற நீங்கள் இந்தக் குணங்களையும் விசாரத்தையும் விட்டுத் தெய்வத்தை நினைக்கலாமே பாட்டி" என்று சொல்வதற்கிடையிற் கிழவி பெருஞ் சத்தமிட்டு அச்சிறுமியை ஏசுதலும், அதற்கிடையில் கிழவியின் மகளாகிய அந்தச் சிறுமியின் தாய் 'பாட்டியோடு உனக்கென்னடி மகளே, சண்டை" என அதட்டிக்கொண்டு வந்த பெண்ணிடம் தாயும் முறையிட்டாள்; மகளும் முறையிட்டாள்; கேட்ட அந்தப் பெண் முதல் தன் மகளைப் பார்த்து, "மகாலெட்சுமி, உனக்குப் பாட்டியோடு என்ன வீண் பேச்சு? பாட்டியோடு சண்டையிடலாமா? வயசுபோன காலத்திலே பாட்டி வாயில் வந்ததைப் பேசக் கூடும்; நீ அவைகளைப் பொருட்படுத்தாதே; பாட்டியோடு மரியாதையாக வல்லவா நடந்துகொள்ள வேணும்; படிக்கும் பிள்ளை உனக்கு இது விளங்காதா?" என்று கடிந்து கூறிவிட்டு, தன் தாயைப்பார்த்து "ஆச்சி, சொல்லுகிறேனென்று கோபிக்காதீர்கள்; சிறு பிள்ளைகளோடு இப்படிப்பட்ட விபரீதமான பேச்சுப் பேசலாமோ" என்று சமாதானஞ் சொல்லிவிட்டுத் தன் மகளைக் கூட்டிக்கொண்டு போனாள்; இப்படி இன்னும் பலர் இந்த விவாக விஷயமாகத் தங்கள் மனப்பான்மைக்கேற்பப் பேசிக்கொள்வார்கள். உலகம் பலவிதமல்லவா.

இருவரும் சகோதரிகளா?

சூரியநாராயண சாஸ்திரியார் அனுப்பிய கடிதத்தைப் பார்த்த இராமச்சந்திரன், அதில் அத்தலைமையாசிரியர் தாம் இராமச்சந்திரன் வீட்டிற்குப் பலமுறைபுஞ் செல்வதால் உண்மையறியாதார் தம்மை விபரீதமாக நினைத்தலுங் கூடுமெனவும், ஆதலினால் தயவுசெய்து அடுத்தநாட் காலை தம் விடுதிக்கு வந்துபோக வேண்டுமென்னும் கருத்துப்பட எழுதியிருப்பக் கண்டான்; அப்படியே அவன் அடுத்தநாள் தன் காலைக் கடன்களையும் போசனத்தையும் முடித்துக்கொண்டு தலைமையாசிரியருடைய வாசஸ்தானத்தையடைந்தான்; தலைமையாசிரியர் இராமச்சந்திரனை வேண்டியவாறு உபசரித்து இருக்கச்செய்து, தாமும் அவன் பக்கலிலிருந்து தம் பாட்டனார் அங்கு வந்திருக்குஞ் செய்தியைச் சொல்லி, அவரையும் இராமச்சந்திரன் முன்னிலையில் அழைத்து இருக்கச்செய்து, இருவரையும் ஒருவரோடொருவர் அறிமுகப்படுத்தினார்; பாட்டனாரும் இராமச்சந்திரனும் சிலமணி நேரம் நானா விஷயங்களையும்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்; இதற்கிடையில் தலைமையாசிரியருடைய விடுதிச்சாலை வாசலில் ஒரு மோட்டர்ரதம் வந்துநிற்றலும், சங்கேதப்படி வேங்கடாசல சாஸ்திரியும் இராமச்சந்திரனும் அந்த இரதத்தில் ஏறிக்கொண்டு இங்கிதமிருக்கும் இல்லத்தை யடைந்தார்கள்; அங்கே தலைவாசலிலிருந்த இராமச்சந்திரனுடைய அபிமானத் தகப்பனார், தம் வீட்டிற்கு வந்த பெரியவரைப் பெரிதும் உபசரித்தார்; இராமச்சந்திரன் அப் பெரியவர் அங்கே வந்த நோக்கமென்ன வென்பதைத் தன் அபிமானப் பிதாவுக்குத் தெரிவித்தான்; அவரும் அப்படியே ஆகட்டுமென்றுசொல்லி மகிழ்ச்சியடைந்தார். இதற்கிடையில் இராமச்சந்திரன் வீட்டினுட்பக்கம்போய், அங்கு ஒருங்கிருந்த இரஞ்சிதத்திற்கும் இங்கிதத்திற்குஞ் சொல்ல, இரஞ்சிதம் உடனே இங்கிதத்திற்கு அலங்காரஞ் செய்துவிட்டுத் தானும் உடன் நின்றாள்: இராமச்சந்திரன் பெரியவரை அந்தஅறையுள் அழைத்துக்கொண்டுபோய் ஒருநாற்காலியில் அமரச்செய்து, தானும் பக்கலில்நிற்க, கன்னியரிருவரும் வந்த பெரியவரைப் பஞ்சாங்கமாக வீழ்ந்து வணங்க, அவர் அவர்களுக்கு ஆசிசொல்லி அவர்களை எழுந்திருங்கள் என்று சொல்ல, அவர்களிருவரும் எழுந்து ஒருபுறத்தே ஒதுங்கி நின்றார்கள்; "இவர்களிருவரும் சகோதரிகளா?" என்று அவர்களைப்பார்த்து அப்பெரியவர் இராமச்சந்திரனை வினவ, இராமச்சந்திரன் "சகோதரிமாரல்லர், ஆனாற் சகோதரத்துவம் பூண்டே யொழுகுகின்றார்கள்" என்று பின் இங்கிதத்தைச் சுட்டி, "இந்த அம்மாள் என் சகோதரி" என்றாள். (வரும்)

'நம்பிக்கை யிழந்தேன்'

என்கிறார் மிஸ்ரர் சென்னாயக்கா

கடைசியாக நடந்த மந்திரசபைக் கூட்டத்தில் மிஸ்ரர் சென்னாயக்கா ஓர் பெரிய "குண்டை"ப் போட்டார் என்று ரைம்ஸ் பத்திரிகை ஓர் செய்தியை வெளியிடுகிறது. அரசாங்க விஷயங்களை நடத்தும் பொறுப்புடையவர்கள், அரசாங்க சேவையில் உள்ளவர்க்கிடையே பிளவை யுண்டு பண்ணி அதன்மூலமாக நாட்டில் அல்லோலகல்லோல நிலையை உண்டாக்க முயற்சித்திருக்கிறார்கள் என்று தாம் நம்புவதாக மிஸ்ரர் சென்னாயக்கா கூறினார்

இன்னும் இந்த நாட்டிற் சமாதானமாக வாழ விரும்பும் பிரஜைகளுக்கு வேண்டிய நேரத்திற் பாதுகாப்பு அளிக்கக்கூடியவன்மை இந்நாட்டுப் பொலிசார்க்கு இல்லை. இவ்விஷயமாகத் தமக்கு பொலிசார் திறமையில் நம்பிக்கையில்லை என்றும் தெரிவித்தார்.

கொழும்பு மேயர் தாக்கப்பட்ட விஷயத்தை மிஸ்ரர் சென்னாயக்கா மந்திரசபையிற் குறிப்பிட்டார். இலங்கையின் தலைநகரத்தின் தலைவராய ஒரு பிரமுகரைக் காடையர் தாக்கி விட்டார்கள். அப்படித் தாக்கிய காடையரைப் பிடிக்கப் பொலிசாரால் இன்னும் முடியவில்லை. மேயர் போகும்போதும், அவர் தாக்கப்பட்டபோதும் அவர்க்குப் பாதுகாப்பளிக்கப் பொலிசார் தவறிவிட்டனர்.

இப்படியான இந்த நிலைமையிலே இலங்கையில் அரசாங்க உத்தியோகஸ்தர்களை நிர்வகிக்கும் பொறுப்பிலிருந்து தாம் விலக விரும்புவதாக மிஸ்ரர் சென்னாயக்கா ஷை மந்திரசபைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

பண்டிதர்

ம. வே. திருஞானசம்பந்தப் பிள்ளையின்

அறுபதாமாண்டு நிறைவு விழா நிதி

இந் நிதிக்குப் பணமுதவுவோரின் பெயர், விலாசம், பணத்தொகை முதலியன:-

திருவாளர்கள்:

	ரூ.	ச.
முன்கணக்குப்படி	917	00
P. பொன்னம்பலம், நகர ஓவசியர், மன்னார்	10	00
S. K. ஆள்வார்ப்பிள்ளை, குருநாகல்	5	00
A. சபாரத்தினம், பிரான்சிஸ் றோட் கொழும்பு	10	00
அருள். தியாகராசா, மின்சாரப்பகுதி கொழும்பு	5	00
மு இராமலிங்கம், வருமானவரிக் கந்தோர், கொழும்பு	5	00
வே. கந்தையா, ஆசிரியர் குருநாகல்	5	00
ஆ. சி. நாகலிங்கம்பிள்ளை, மேலைப்புலோலி	5	00
K. C. செல்வத்துரை, தெல்லிப்பழை	10	50
சி. செல்வத்துரை, ஆசிரியர், வீமன்காமம்	5	00
ஸ்ரீமதி கனகம்மா ஆழ்வார்ப்பிள்ளை (கொழும்பு)	10	00
ஸ்ரீமதி S. W. றஸல், பார்ன்ஸ் ஹவுஸ், சங்கானை	10	00
ஆக	997	50

மேற்படி பண்டிதரவர்களின் மாணாக்கர்கள் அபிமானிகளாயுள்ளாரனைவரும் இந் நிதியின் பொருட்டுத் தம்மால் இயன்ற பணம் உதவுக: மேலும் பணம் உதவும் அன்பர்கள் தம் பெயர் விலாசமென்னு மிவைகளைத் தெளிவாக எழுதி மேற்படி நிதித் தனாதிகாரியவர்கள் விலாசத்திற்கனுப்புக.

கா. கந்தையா, தலைவர். க. சி. சுப்பிரமணியம், காரியதரிசி. அ. கனகசபாபதி, தனாதிகாரி,

ஷை பண்டிதரின் சஷ்டியப்தபூர்த்திச் சபை, வண்ணார்பண்ணை.

Mis 131 8-11-46

தேகவியோகம்

ஐக்கிய மலாய் நாட்டிற் பலகாலம் திறமையுடன் அரசாங்க உத்தியோகத்திற் கடமையாற்றி இளைப்பாறியிருந்த ஸ்ரீ S. மருதமுத்து அவர்கள் தம்மைச் சிலநாள் பீடித்த நோய் காரணமாக 71-வது வயதில் வட்டுக்கோட்டை கிழக்கில் உள்ள தமது இல்லத்திற்றானே சென்ற 2-11-46ல் இவ்வுலகவாழ்வை ஒருவினர் என அறியலானேம்.

இவருடைய ஈமக்கிரியைகள் இவருடைய புதல்வர் ஸ்ரீ மகேசன் அவர்களால் இனசனங்கள் சமுகத்திற் சிறப்பாகச் செய்யப்பெற்றன.

ஸ்ரீ மருதமுத்து, வட்டுக்கோட்டை ஸ்ரீ பொன்னம்பலம் அவர்களுக்கு மைத்துனரும், ஸ்ரீ V. S. நாதன் அவர்களுக்கு மாதுலரும் ஆவர்.

இவரைப் பிரிந்து துயருறும் சுற்றமித்திரருடன் யாமும் அனுதாபம் உறுகின்றேம்.

விற்பனைக்கு

முல்லைத்தீவிலிருந்து திரிகோணமலை றோட்டில் 19 மைல் தூரத்தில் கொக்குத் தொடுவாய் கிராமத்தில் கிழக்கெல்லை பெருங்கடலாயுள்ள செழிப்பான காடு 86 ஏக்கர் 4 துண்டுகள். 43, 23, 10. 10 ஒருமித்தேனும் தனித்தனியேனும்; விலை உயர்ந்த மரங்களும் விறகும் ஏராளமாயுண்டு. விரும்புவோர் முல்லைத்தீவு நியாய துரந்தரர் தருமலிங்கம் அவர்களிடமேனும், வெள்ளவத்தை 27ம் நம்பர் 34ம் லேனில் இருக்கும் டாக்டர் சிவசிதம்பரம் அவர்களிடமேனும் விலையைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். Mis 220 8, 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ச் சமயம்

(திரு. சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை)

இவ்வுலகத்திலே தேக அமைப்பிலோ அல்லது அறிவு வளர்ச்சியிலோ ஒருமைப்பாடுடைய இரண்டு மனிதரைக் காண்பதரிது. வித்தியாசங்கள் ஏற்படுவதற்குக் காரணங்கள் பல. தேசாசாரம், பரம்பரை, கூட்டத் தொடர்பு முதலியன இப்பேதங்களுக்குக் காரணங்களாம். இப்படியான அறிவு வளர்ச்சிக்கேற்றபடி பல சமயங்கள் உண்டாயின. ஒவ்வொருவரும் தத்தம் தகுதிக்கேற்றபடி ஓர் சமயத்தை மேற்கொண்டு ஒழுகுவர். அவரவரின் வினைக்குத் தக்கபடி ஒவ்வொருவரும் ஓர் சமயத்திற் பிறந்து அதனை அனுட்டிக்கின்றனர். அவ்வச் சமயத்திற்குத் தகுந்தவாறு அவர்களுக்குப் பலன் அளிக்கப்படுகின்றது. ஆனால் பரமுத்தியைத் தரவல்லது உண்மைச் சமயமொன்றே. இதுவே இராசாங்கத்திலமர்ந்த வைதிக சைவ சமயம். மற்றைய சமயங்களெல்லாம் வணிப்படி போன்றவை, உண்மைச் சமயமாகிய சைவ சமயத்திற் கொண்டுபோய்விடுபவை. அத்துவித ஆனந்தத்தைத் தரத்தக்கது சைவசமயமொன்றே. மற்றைய சமயங்களில் சிற்சில உண்மைகளைக் காணலாகும், ஆனால் எல்லா உண்மைகளையும் ஒருங்கே அடக்கி வைத்திருப்பது சைவ சமயமே. இதனாற்றான் தாயுமானப் பெருந்தகையார் 'சைவ சமயமே சமயம் சமயாதீதப் பழம் பொருளைக் கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டும்" என்று கூறினர். இவ்வுண்மை நெறிகூறும் வழியைக் கடைப்பிடித்தாலன்றிச் சச்சிதானந்தம் பெற முடியாது. இதுவும் குருமுகமாகக் கிடைக்கவேண்டும்.

வைத்தியசாலையில் வைத்தியரும் உளர், மருந்து எடுத்துப் பிணியாளருக்கு வழங்குபவரும் உளர். அநுபவத்தினால் மருந்து கொடுப்பவருக்கு மருந்துகளின் தன்மையும் நோய்களின் குறிகளும் தெரியலாம் ஆனால் அவர் வைத்திய நிபுணராகார். அவர் வைத்தியராகவேண்டுமாயின் அதற்கேற்ற முறைப்படி ஒருவரை அடுத்து அவரிடம் வைத்தியக் கல்வியில் தேர்ச்சி பெறவேண்டும். இஃதேபோல் ஒவ்வொரு சமயத்திலும் ஏதேனும் ஓர் உண்மை காணப்படலாம். உண்மைச் சமயமொன்றே எமக்கு இத்துறையில் வழிகாட்டத் தக்கது. சித்தாந்த சாத்திரப்படியாம் நடந்தாலன்றி முத்தி நெறியை அடைய முடியாது. ஏனைய சமயங்கள் மூன்றும் தத்துவங்களுக்குள் அடங்குவன. சித்தாந்தம் தத்துவங்களைக் கடந்தது. அவைகளுக்கு மேல்நிலையில் உள்ளது.

சைவ சித்தாந்தத்திலும் நான்கு பாதங்கள் அல்லது வழிகள் உண்டு. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவை. ஞானமே அத்துவித முத்தியைப் பயப்பது. மற்றைய மூன்று பாதங்களும் ஞானத்திற்கு வழிகாட்டியாகும்.

1 விரும்புஞ் சரியை முதல்
மெய்ஞ்ஞான நான்கும்
அரும்பு மலர் காய்கனி
போலன்றோ பராபரமே
2 முத்தாந்த வீதி மூளரிதொழு
மன்பருக்கே
சித்தாந்த வீதி வரும்
தேவே பராபரமே

என்னும் தாயுமானவர் பாடல்கள் இங்கே சிந்திக்கத்தக்கவை. சைவத்தின் தனிப்பெருமை இவ்வாறிருப்பவும் இக்காலத்திற் சிலர் சைவப் பிரசாரகர் என்னும் பெயரைப் பூண்டுகொண்டு எல்லாச் சமயமும் சமம் என்று கூறித் திரிகின்றனர். உதாரணமாக ஒரு நிகழ்ச்சியைக் காட்டுவாம்.

செந்தமிழ் மலர்மாலை (முதற்புத்தகம்) எனப் பெயரிய ஓர் தொகுப்பு நூல் 4-வது பாரத்திற்கு இவ்வருட தமிழ்ப் பாடமாக வைக்கப்பட்டுள்ளது. அப்புத்தகத்தின் ஆரம்பத்தில் சமரசம் என்னும் தலைப்பின் கீழ் பின்வரும்கடவுள்வாழ்த்துக் காணப்படுகின்றது.

உலகினில் துன்பம் நீங்க
வுண்டனை நஞ்சை யன்பே
சிலுவையில் நின்று செந்நீர்
சிந்தினை யரசை நீத்து
விலகினை மாடு மேய்க்க
விரும்பினை யடியுந் தாங்கி
இலகினை சமரசத்தை
யெண்ணினாற் றுயரம் போமே

இப்பாடலில் சிவபிரான் புரிந்த இரண்டு திருவிளையாடல்களோடு (நஞ்சை யுண்டதும் மண்சுமந்து பாண்டியன் கையிற் பிரம்படி பட்டதும்) கிறஸ்து நாதர் சிலுவையில் அறையப்பட்டதையும் கண்ணபிரான் மாடுமேய்த்த கதையையும் ஒப்பாகக் கூறியுள்ளார் அப்பாடலின் ஆக்கியோன். சிவபிரான் ஒருவரே பசுபதி, மற்றைய தெய்வங்களெல்லாம் பசுக்கள் என்னும் சித்தாந்த சாத்திரக் கருத்தை இவர் புறக்கணிக்கத் துணிந்தது பெரிதும் வெறுக்கத்தக்கதாம். சமரசம் என்னுஞ் சொல்லை விளக்கவந்த நூலின் பதிப்பாசிரியர் - சமரசம் - எல்லா மதங்களையும் சமமாகக் கருதுதல். அதாவது எம்மதமும் சம்மதமென்பது என்று குறிப்பு எழுதியுள்ளார்.

சமரசம் என்னுஞ் சொல் தாயுமானவரால் தம்முடைய பாடல்களில் எடுத்தாளப்பட்டுளது. அவர் வேதாந்த சித்தாந்த சமரசம் பேச வந்தார். அதாவது உபநிடதங்களின் முடிவும் ஆகமங்களின் முடிவும் ஒத்த கருத்துடையனவாகக் காணுதல் என்பதாம். இதைப்பற்றிச் சைவப் பெரியாராகிய சோமசுந்தர நாயகர், நல்லசாமிப்பிள்ளை, சபாரத்தின முதலியார் முதலியோர் பல ஆண்டுகளுக்கு முன்னரே எழுதியுள்ளார்கள். இவற்றையெல்லாம் நிராகரித்து எல்லா மதமும் சமத்துவமுடையன என்று இளைஞர்களுக்குப் போதிப்பது பெருந் தவறும்.

உன் திருவடிக்கீழுறுதியா மன்பு
மூன் திருவருளினாற் கிடைப்ப
தன்றி நூல் பலவுமாய்ந்த
தாலுரை செயளப்பருந்
திறமையான் மதியால்
மன்றவே கிடைப்பதன்று
மற்றதனை மாதவஞ்
செய்திலாக் கயமை
துன்றிய புலையோர் யாங்ஙனம்
பெறுவார் சோதியே
கருணை வாரிதியே

என்னும் ஆன்றோர் பாடலுக்கு இலக்காயினர்போலும்.

அறிவித்தல்

கிளிநொச்சிக் கலனி குடியேற்றத்தில் வீடுகள் கட்டும் இடங்களில் 12,200 புசல் சூளைச் சுண்ணாம்பு கொடுப்பதற்கு 1946ம் ஆண்டு நொவெம்பர் மாதம் 19ந் திகதி பகல் 12 மணி வரைக்கும் கொழும்புத் திறைசேரியில், ரெண்டர்போட் சேர்மன் அவர்கள் ரெண்டர் ஏற்றுக்கொள்வார் ரெண்டர்கள் ரூபா 100/ பணம் கட்டி வடமாகாண அரசாட்சி ஏசன்டரிடம் பெற்றுக்கொண்ட பேரம்களில் எழுதப்பட வேண்டும். மறு விபரங்களையும் அவரிடத்தில் அறிந்துகொள்ளலாம்.

G 99 5, 8

ஜீவாதார வைத்திய விளம்பரம்

மானிடர்க்குப் பெருஞ் செல்வமாகக் கிடைத்த சஞ்சீவி வைத்தியம்

ஒருமனதுடன் வந்து நற்சுகத்தைப் பெறுங்கள்

பித்தம், மேகச்சூடு, சலரோகம், இருமல், தொய்வு ஏனைய காய்ச்சல் ரோகங்களும் மருந்து அருந்திய நேரந் தொடங்கி வருத்தம் காண்பியாது நற்பலனைக் கொடுக்கும். எந்த ரோகிகளும் தாங்கள் இரத்தம் சுத்தமாகும் வரை மருந்து அருந்தி வரவேணும்.

இங்ஙனம்,
க. த. அப்பாத்துரை.
சுதேசவைத்தியர்
தாவடி வடக்கு, கொக்குவில்.

(Mis 160 30-8—30-11-46)

நற்சாட்சிப் பத்திரங்கள்

ஜீவாதார வைத்தியசாலையில் நமது மனைவி (Hysteria) வாய்வுக்கு, தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரைப்பிள்ளையிடம் 3 வேளை மருந்து சாப்பிட்டபின் பூரண சுகமடைந்ததை இத்தால் சகலருக்கும் அறிவிக்கிறேன்.

இங்ஙனம்,
த. சின்னத்துரை,
தாவடி.

ஜீவாதார வைத்தியசாலையில் தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரை அவர்களின் மருந்துகளை இரண்டுநேரம் உட்கொண்டதினால், நாலு வருஷ காலமாகக் கஷ்டப்பட்டிருந்த தொய்வு வியாதியால் மீளப்பெற்று மூன்று மாதத்தின் பின் இதை வெளியாக்குகிறேன்.

இங்ஙனம்,
லோறன்ஸ் மிக்கேல்,
கரையூர்.

(Mis 195 22-10 to 21-1-47)

விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 260ம் இலக்கப் பராபரிப்பு தத்துவ வழக்கில் தத்துவகாரனாக நியமிக்கப்பட்ட சுழிபுரம் சம்பந்தர் சுப்பையா அவர்களுக்கு இதன்பின்னால் ஆதனடாப்பில் விபரித்திருக்குங் காணியை விற்பதற்கு உத்தரவு கொடுத்திருக்கிற படியால் அவ்வாதனத்தை உயர்ந்தவிலை கேட்பவற்கே விற்பதாகத் தீர்மானிக்கப்பட்ட படியால் கீழே விபரிக்கப்படும் ஆதனத்தை வாங்க விரும்புவோர் தாங்கள் வாங்க விரும்பும் விலைகளையும் விஷயங்களையும் மேற்படி வழக்கில் தரணியாகவிருக்கும் சுழிபுரம் தா. சங்கரப்பிள்ளை பிறக்ரர் ஸ்ரீ வர்களிடமாவது அல்லது மேற்படிகோட்டின் சக்கடத்தார் அவர்கள் இடம் இவ்விளம்பரத் தேதியின் 21 நாளைக்குள் தெரிவிக்கும்படி அறிவிக்கப்படுகிறது.

ஆதனம்

வடமாகாணம் யாழ்ப்பாணம்டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு சங்கானைக் கோயிற்பற்று தொல்புரம் இறை ஆவரம்பிட்டி பிச்சிப்புலம் தலைசாட்டி பர. நெல் இலா 14 குளி 7½ எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை பெண் சிவகாமன், வடக்கு சம்பந்தர் வேலாயுதற்கும் செல்லப்பா பெண் வள்ளியம்மைக்கும், மேற்கு ஆள்வான் பெண் கொத்தியார், தெற்கு தம்பையா சுப்பையாவும் மறுவும் இது அடங்கலிற் சொரியலாய் அரைவாசி.

T. Sangarapillai
Proctor for Guardian.

Mis 212 5, 8

பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருரூத்தல் விலை ரூபா 25
அரைரூத்தலுக்கு ரூபா 12-50
கால்ரூத்தல் ரூபா 6-25

விலாசம்:
க. ஆறுமுகம்பிள்ளை
நி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis.25 23-4-46 to 22-3-47)

தந்தரோகசஞ்சீவி
கந்தசாமி வைத்தியர்
சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தாவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா மூலிய செலவு வேறு.

விலாசம்:
ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis 211 1.11-46—30-4-47 (வெ)

பர்மாப்பிரதமரின் இந்திய விஜயம்

பர்மா இடைக்காலஅரசாங்கத்தின் பிரதம மந்திரியான ஆங்சேன் இந்தமாதம் அல்லது அடுத்தமாதம் இந்தியாவுக்கு விஜயம் செய்து இந்தியப் பிரதமர் பண்டிதர் ஜவஹர்லால் நேருவுடன், இருநாடுகளுக்கும் பொதுவான பல விஷயங்களைப்பற்றிச் சம்பாஷிப்பார் என்று ஓர் செய்தி கூறுகிறது.

விசாரணையில்லாச் சிறையாளர்

பண்டிதர் நேருவின் தேசிய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தபின், விசாரணையின்றிச் சிறையில் வைக்கப்பட்டுள்ள அரசியற் சிறையாளர்கள் யாவரும் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர் என்று சர்தார் வல்லபாய் படேல் சென்ற புதன்கிழமை இந்திய மத்திய சட்டசபைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday, November 8, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org